நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 13/10/2025

**சாதரணக் கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் எதிர்வரும் **2025**ம் வருடம் **அக்டோபர்** மாதம் **17** ம் தேதி **வெள்ளி** கிழமை காலை 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண். 1**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 241/செ.ம.தொ/செ/2025 நாள் 07.08.2025 ல், தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழில் 2025 ம் ஆண்டு சிறப்பு தொழில் மலர் வெளியிடவுள்ளதாகவும்,அதில் அரசு சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மற்றும் சாதனைகள் அடங்கிய விளம்பரத்தினை, நிதி நிலைக்கேற்ப வழங்கிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி இந்நகராட்சி நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை வழங்கியதற்கும், அதற்கான செலவினத் தொகை ரூ.62370/-(தினகரன்- ரூ 32760/- + தினத்தந்தி ரூ.29610/-) மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் நடைபெற்ற திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதப்படி, தினகரன் மற்றும் தினத்தந்தி நாளிதழ் சிறப்பு தொழில் மலரில் வெளியிட்ட வகைக்கு, பட்டியல் தொகை ரூ. 62370/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 698 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் குடிநீர் திட்ட நீரேற்று நிலையங்களுக்கு தேவையான மின் விளக்குகள் மற்றும் உதிரிபாகங்கள் கொள்முதல் செய்ய வேண்டி ரூ.4.60 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 594 நாள் 29.04.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகம், குடிநீர் நீரேற்று நிலையம், மற்றும் இதர கட்டிடங்களுக்கு தேவையான 20 வாட்ஸ் மற்றும் 60 வாட்ஸ் எல் இ டி விளக்கம் மற்றும் மின்சாதனப்பொருட்கள் சப்ளை செய்தல் (மதிப்பீடு ரூ.4.60 இலட்சம்) ந.க.எண் 530/ 2025 /இ 1 | ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.07% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | மாலினி லைட்டிங் ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.01% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.07% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 699 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் இந்நகர் பகுதியில் உள்ள உயர்கோபுர மின்விளக்குகள் சரி செய்யும் பணி மேற்கொள்ள வேண்டி ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 582 நாள் 18.03.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதி உயர் கோபுர மின் விளக்கு பராமரிப்பு பணி (மதிப்பீடு ரூ.2.50 இலட்சம்)<br>ந.க.எண் 438/ 2025 /இ 1 | ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | மாலினி லைட்டிங் ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.00% மதிப்பீட்டு விலைவிகிதம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் ஷா ஜெகன்லால் ஜெயந்திலால் திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 700 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் பாபநாசம் மெயின் ரோடு பகுதியில் உள்ள நகரநல வாழ்வு மையத்தில் தணிணீர் வசதி செய்யும் பணி மேற்கொள்ள ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 595 நாள் 29.04.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 13 வது வார்டு நகர்நல மையத்திற்கு (Urban Health Centre) தண்ணீர் வசதி செய்துக்கொடுத்தல் (மதிப்பீடு ரூ.1.00 இலட்சம்) ந.க.எண் 530/ 2025 /இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.03% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.02% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 701 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர்நிதியின் கீழ் பொதிகையடி மற்றும் ஒட்டன்குளம் நீரேற்று நிலையங்களில் உள்ள மோட்டார்களுக்கான Starter மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 598 நாள் 29.04.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி, ஒட்டன்குளம் நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் , பேனல் போர்டு மற்றும் ஸ்டாட்டர் ஆகியவைகள் சப்ளை செய்தல் (மதிப்பீடு ரூ.2.00 இலட்சம்) ந.க.எண் 530/ 2025 /இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.92% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 702 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி குடிநீர்நிதியின் கீழ் தலையணை மற்றும் வம்பளந்தான் பாறை நீரேற்று நிலையங்களில் உள்ள மோட்டார்களுக்கான Starter மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 635 நாள் 26.06.025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி தலையணை, வம்பளந்தான் பாறை நீரேற்று நிலையத்தில் மின் மோட்டார் , பேனல் போர்டு மற்றும் ஸ்டாட்டர் ஆகியவைகள் சப்ளை செய்தல் (மதிப்பீடு ரூ.3.00 இலட்சம்) ந.க.எண் 927/ 2025 /இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.04% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.00% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.04% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 703 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் கீழணை மற்றும் சன்னதி நகராட்சி நடுநிலைபள்ளிகளில் மும்முனை மின்சார இணைப்பு வழங்கும் பணி மேற்கொள்ள ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 636 நாள் 26.06.025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கீழணை மற்றும் சன்னதி தெரு நடுநிலைப்பள்ளிகளில் மும்முனை இணைப்பிற்கான , மின்சார வசதி செய்துக்கொடுத்தல் பணி (மதிப்பீடு ரூ.2.00 இலட்சம்) ந.க.எண் 847/ 2025 /இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.99% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.05% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 704 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சிதிலமடைந்த வடிகால்களின் தடுப்புசுவர்கள் மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 639 நாள் 26.06.025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அனைத்து வார்டு பகுதிகளிலும் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சாலைகள் பராமரிப்பு பணி (மதிப்பீடு ரூ.7.00 இலட்சம்) ந.க.எண் 847/ 2025 /இ 1 | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.03% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 1.03% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.03% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 705 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதுநிதியின் கீழ் வார்டு எண் 13 தாமிரபரணி நகர் சமுதாய நலக்கூடத்திற்கு வர்ணம் பூசி மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மான எண் 649 நாள் 26.06.025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 06.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 13 தாமிரபரணி நகர சமுதாய நலக்கூடம் வர்ணம் பூசி மேம்பாடு செய்தல் பணி (மதிப்பீடு ரூ.2.50 இலட்சம்) ந.க.எண் **847/ 2025 /இ 1** | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.16% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.97% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.16% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 706 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பள்ளி மேம்பாட்டு மான்ய நிதி 2025-26 ன் கீழ் வார்டு எண் 10 டாணா பகுதியில் புதிய அங்கன்வாடி மையம் கட்டும் பணி மேற்கொள்ள ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டிற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண் 9732/2025/SS2 நாள் 10.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 08.10.2025 அன்று இணையதளம் வழியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி டாணா அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுதல் (அங்கன்வாடி மையம் எண்33628010108) | திருமதி. சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.01% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. கே.ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.19% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி (0.01% மதிப்பீட்டைவிட குறைவு ) கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திருமதி. சுப்புலெட்சுமி திருநெல்வேலி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 707 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் ,அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண் 192/2025/SBM-1 நாள் 07.10.2025 ன் படி, 2025-26 ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 திட்டத்தின் கீழ் விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் பயன்படுத்தப்பட்ட நீர்மேலாண்மைக்காக கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைக்கும் பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரபடி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஓப்பந்தப்புள்ளி கோரி, பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு (ந.க.எண் 997/2023/இ1)

| வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | மத்திய அரசு பங்குத்தொகை 50 % | மாநில அரசு பங்குத்தொகை 33 % | நகராட்சி பங்குத் தொகை 17 %. |
|---|---|---|---|---|
| விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் 4எம்ல்டி கொள்ளவு கொண்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) அமைத்தல் | 8.33 கோடி | 4.17 கோடி | 2.75 கோடி | 1.41 கோடி |
| விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான (STP) 10.2 கி.மீ நீளத்திற்கு இடைமறிப்பு மற்றும் திசைதிருப்பல் பணி | 7.58 கோடி | 3.79 கோடி | 2.50 கோடி | 1.29 கோடி |

**அலுவலகக்குறிப்பு**

சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்திரவு ன் படி 2025-26 ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 திட்டத்தின் கீழ் மேற்கண்ட விவரப்படி கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணி மேற்கொள்ளவும், அதற்காக ஒதுக்கப்பட்ட மத்திய அரசு பங்குத் தொகை ரூ.7.96 கோடி, மாநில அரசு பங்குத் தொகை ரூ. 5.25 கோடி ஆகிய அரசின் நிதி ஒதுக்கீடு தொகை போக நகராட்சி பங்களிப்பு தொகையான ரூ. 2.71 கோடியினை நகராட்சி பொது நிதியில் இருந்து ஈடு செய்யவும் , ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 708 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 199ன் படியும், தமிழ்நாடு நகராட்சி உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 அத்தியாயம் XI பிரிவு IVன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குள் சட்டப்படி வரையறுக்கப்பட்ட எல்கைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத்தொட்டியில் இருந்து கழிவுகளை உரிய விதிகளின் படி பாதுகாப்பான முறையில் அகற்ற தனியார் கழிவு அகற்றும் வாகனங்களுக்கு உரிமம் வழங்கி முறைப்படுத்தவும், பாதுகாப்பற்ற முறையில் சுத்தம் செய்ய அனுமதிப்போர் மீதான தண்டனை ஏற்படுத்துதல் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட கசடு கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்) 2024யினை தினசூரியன் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உண்டான செலவுத்தொகை ரூ.14784/- ஐ வழங்குமாறு பட்டியல் எண்.2687ல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.14784/-ஐ தினசூரியன் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண்.1965/2015/எச்1.)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 709 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 199ன் படியும், தமிழ்நாடு நகராட்சி உள்ளாட்சி அமைப்பு விதிகள் 2023 அத்தியாயம் XI பிரிவு IVன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குள் சட்டப்படி வரையறுக்கப்பட்ட எல்கைக்குள் உள்ள கட்டிடங்களில் கழிவறைகள் மற்றும் நச்சுத்தொட்டியில் இருந்து கழிவுகளை உரிய விதிகளின் படி பாதுகாப்பான முறையில் அகற்ற தனியார் கழிவு அகற்றும் வாகனங்களுக்கு உரிமம் வழங்கி முறைப்படுத்தவும், பாதுகாப்பற்ற முறையில் சுத்தம் செய்ய அனுமதிப்போர் மீதான தண்டனை ஏற்படுத்துதல் தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட கசடு கழிவு மற்றும் கழிவுநீர் மேலாண்மை துணை விதிகள் (திருத்தம்) 2024யினை மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு உண்டான செலவுத்தொகை ரூ.15000/- ஐ வழங்குமாறு பட்டியல் எண்.2526/0215ல் வரப்பெ9ற்றுள்ளது. எனவே மேற்கண்ட தொகை ரூ.15000/-ஐ மாலைமுரசு நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது (ந.க.எண். 1965/2015/எச்1)

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 710 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள அய்யனார்குளம் நுண்ணுயிர் உரக்குடிலில் 15.09.2025 அன்று எதிர்பாராத விதமாக தீ பற்றியது. உடனடியாக அம்பாசமுத்திரம் தீயனைப்பு நிலையத்தினை தொடர்பு கொண்டு தீயானது முற்றிலும் அணைக்கப்பட்டது. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தற்போது தீ அணைக்கப்பட்டு எறிந்தும் எறியாமலும் உள்ள குப்பைகளை டிராக்டர் மற்றும் JCB கொண்டு அப்புறப்படுத்த ஆகும் செலவினத்திற்கு கீழ்கண்டவாறு வரப்பெற்ற உள்ளூர் விலைப்புள்ளியின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு மற்றும் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள கா.ராஜா ஒப்பந்ததாரர் என்பவர் மூலம் பணி மேற்கொண்டதற்கும் அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண் 1965/2015/எச்1)

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | டிராக்டர் ( நாள் ஒன்றுக்கு வாடகை ) | JCB (நாள் ஒன்றுக்கு வாடகை) |
|---|---|---|---|
| 1 | க.ராஜா | ரூ 900/. | ரூ4500/. |
| 2 | ஆர். சுப்புலெட்சுமி | ரூ950 | ரூ5000/. |

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 711 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் வார்டு எண் 1, 2, 15, 16, 17, 20 ஆகிய பகுதியில் குடிநீர் திட்ட மேம்பாட்டு பணிகளின் கீழ் குடிநீர் குழாய் பதிக்கும் போது ம், பருவமழையின் காரணமாகவும், பல இடங்களில் மழைநீர் வடிகால் சிதிலமடைந்து உள்ளதால், அவ்வார்டு பகுதி பொது மக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. எனவே அப்பகுதி பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட வார்டு பகுதிகளில் சிதிலமடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்யவும், புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள

மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

நகர்மன்ற உறுப்பினர்களின் கோரிக்கையின் படியும், அப்பகுதி பொது மக்களின் நலன் கருதியும் சிதிலமடைந்த மழைநீர் வடிகாலினை சரி செய்யவும், புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 9.00 இலட்சதிற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 712 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 16</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக தரைதளம் கட்டிடம் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு பல ஆண்டுகள் ஆகிய நிலையில், மேற்கண்ட அலுவலக கட்டிடத்தினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் , அலுவலக அருகாமையில் உள்ள அம்மா உணவக கட்டிடமும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், மேற்கண்ட அம்மா உணவக கட்டிடம் மற்றும் அலுவலக கட்டிடத்தினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அம்மா உணவகத்தின் பாதுகாப்பு மற்றும் அலுவலக கட்டிடத்தின் பாதுகாப்பு கருதி பழுது மற்றும் பராமரிப்பு மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.8.50 இலட்சதிற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 713 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 17</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 2 அய்யனார்குளம், வார்டு எண் 9 அகஸ்தியர்புரம் மற்றும் வார்டு எண் 20 பூந்தோட்டம் ஆகிய பகுதியில் உள்ள அடிபம்பினை அகற்றி விட்டு, புதியதாக மோட்டார் அறை மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணி மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களின் தண்ணீர் தேவையின் அவசியத்தை கருத்திற்கொண்டு பணி மேற்கொள்ளும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.8.00 இலட்சதிற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 714 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 18</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அம்ரூட் 2.0 திட்டத்தின் கீழ் குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பொதிகையடி தூய நீரேற்று நிலைய வளாகத்தில் புதியதாக 4.00 எம்ல்டி கொள்ளவு கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு அம்ரூட் 2.0 திட்ட மதிப்பீட்டில், கட்டிடங்களின் மேல் தளத்தில் பாதுகாப்பு கருதி தளக்கல், கப்பி அடித்தல், வர்ணம் பூசுதல், மேல்தளத்திற்கு செல்வதற்கான ஏனி படிகள் அமைக்கும் பணி மேற்கொள்ள வழிவகை செய்யப்படவில்லை என்பதால், மேற்கண்ட பணிகளின் அவசியம் கருதி இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார்

செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00 இலட்சத்திற்க மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

அம்ரூட் 2.0 திட்டப்பணிகளில் வழிவகை செய்யப்படாத பணிகளை கட்டிடத்தின் பாதுகாப்பு கருதி, மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 10.00 இலட்சதிற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 715 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 19</u>**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 31420/22/SBM2. நா::s 06/12/2024 ல் தூய்மை இந்தியா திட்டம் (நகர்புறம்) 2.0 ன் கீழ், தூய்மையான கழிப்பிடம் பிரச்சாரம் (Clean Toilet Campaign 2024) ன் கீழ் நகர்ப்புறங்களில் உள்ள சமுதாய கழிப்பிடம் மற்றும் பொது கழிப்பிடத்தினை பராமரிப்பு செய்யும் பணி மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி, இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு மூலம் இந்நகர் பகுதியில் உள்ள 11 எண்ணம் சமுதாய கழிப்பிடம் மற்றும் 3 எண்ணம் பொது கழிப்பிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் , வர்ணம் பூசும் பணி மேற்கொள்ள வேண்டி, கேட்டுக்கொண்டுள்ளதின் படி, நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 8.00 இலட்சத்திற்கும், பணியின் அவசியம் கருதி உடன் மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதாரம் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் அறிவுரையின் படியும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம் மற்றும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 716 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 20</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் அமையப்பெற்றுள்ள , மழைநீர் வடிகாலின் மேல் உள்ள இரும்பு மூடிகள் , சிதிலமடைந்த நிலையில் உள்ளதாலும், பல இடங்களில் மூடி இல்லாமல் உளளதாலும், பொது மக்கள் , பாதசாரிகள் மற்றும் குழந்தைகள் வடிகாலை கடந்து செல்லும் போது மிகவும் ஆபத்தான பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளதால், பொது மக்களின் நலன் கருதி, நகர் பகுதிகளில் உள்ள அனைத்து வடிகாலின் மேல் உள்ள சிதிலமடைந்த இரும்பு மேல் மூடியை மாற்றி சிமெண்ட் சிலாப் அமைக்கவும் , மூடி இல்லாத இடங்களில் புதிய சிமெண்ட் ஸ்லாப் மூடிகள் அமைக்கவும் மதிப்பீடு தயார் செய்து பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் 681 நாள் 26.09.2025 ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.95 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.4.95 இலட்சதிற்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 717 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 21 718</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் நலன் கருதியும் மற்றும் நகராட்சிக்கு வரும் பொதுமக்களை நிர்வகிக்க ஏதுவாக, புதியதாக உட்கட்டமைப்பு மற்றும் அடிப்படைவசதிகளுடன் கூடிய கட்டிடம் கட்டும் பொருட்டு விக்கிரமசிங்கபுரம் வருவாய் கிராமம II சர்வே புல எண் 54 ல் சுமார் 2 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை சர்வே செய்து, புதிய கட்டிடம் கட்ட ஏதுவாக விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பெயருக்கு நில மாற்றம் செய்திட திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றும் அம்பாசமுத்திரம் வட்டாச்சியர் அவர்களுக்கும் கருத்துரு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் தொடர்ச்சியாக மேற்கண்ட பகுதியில் புதிய அலுவலக கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவாக நிலத்தை ஆய்வு செய்து, நிலத்தின் தன்மைக்கேற்ப தொழில் நுட்ப ரீதியாக கட்டிடத்தை வடிவமைக்க வேண்டி, வரைபடம் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வரை பெற்று தர வேண்டி , தனியார்ஆலோசகர் நிறுவனமான அயோத்தி கன்ஸல்டன்சி நிறுவனத்திற்கு பணியின் அவசியம் கருதி , பணி உத்திரவு வழங்கவும், அதற்கான பட்டியல் தொகை கட்டிடம் கட்டுவதற்கு தயார் செய்யப்படும் மதிப்பீட்டுத் தொகை தோராயமாக ரூ. 6.50 கோடியில் , ஆலோசனை கட்டணமாக மதிப்பீட்டுத் தொகையில் 1 முதல் 1.5 சதவிகிதத்தை வழங்கிடவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பணியின் அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு, தனியார் ஆலோசகர் நிறுவனமான அயோத்தி கன்ஸல்டன்சி நிறுவனத்தின் மூலம் பணி மேற்கொண்டதற்கும், ஆலோசனை கட்டணம் வழங்கவும், செலவீனத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்,

**தீர்மான எண் : 718 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண். 22</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 5 காந்திபுரம் தெரு அருந்ததியர் தங்கம்மன் கோவில் எதிரே உள்ள ஜிஐ குடிநீர் பகிர்மான குழாய் பழுதடைந்தள்ளதால், அப்பகுதிக்கு குடிநீர் விநியோகம் பாதிப்படைவதுடன் குடிநீர் வீனாக செல்வதால், அதனை மாற்றம் செய்து தர கேட்டு 5 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் அவர்களால் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. அதன் படி பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகம் பாதிப்படையாமல் தடுக்கும் பொருட்டு மேற்கண்ட பழுதடைந்த குடிநீர் பகிர்மான குழாயினை மாற்றம் செய்யும் பணி மேற்கொள்ள வேண்டி, நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 30,000/-க்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின்அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதியும், அப்பகுதி பொது மக்களுக்கு சீரான குடிநீர் வழங்கும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 30,000/-க்கும், பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 719 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/- S.P.M.செல்வசுரேஷ் பெருமாள்**

**நகர்மன்றத் தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி